கழகத் தலைவர்,. முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க , விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், கிளை செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA 2), பாக BDA முகவர்கள், ஆலோசனைக் கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி, மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், திருக்கோவிலூர் தேர்தல் தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலு, ஒன்றிய நிர்வாகிகள் MJK.கிருஷ்ணமூர்த்தி, சடகோபன், மோகன்ராஜ், காசி.விஸ்வநாதன், ஏழுமலை, மாதவன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவளித்த விவசாயிகளின் எதிரிகளே!

10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் ‘மா” விவசாயிகளுக்கு நீங்கள் செய்தது என்ன? ‘மா” விவசாயிகளுக்கு ஆதரவு போராட்டமா? அரசியல் நாடகமா?

தி.மு.க. மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் கேள்வி!

கிருஷ்ணகிரி, ஜூன் 20 -

தி.மு.க. மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ‘மா” விவசாயி களுக்கு ஆதரவாக போராட் டம் நடத்த உள்ள அ.தி.மு.க.வினர் 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் ‘மா” விவசாயி களுக்கு செய்தது என்ன?

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 1லட்சம் ஏக்கரில் மா பயிரிடப்பட்டு, ஆண்டிற்கு சுமார் 3 லட்சம் மெட்ரிக் டன் ‘மா” விளைகிறது. மேற்படி ‘மா” விளைச்சல் ஆண்டிற்காண்டு கூடுதலாகவும் அல்லது குறை வாகவும் மாறி மாறி விளையும். அதேப்போல் ஆண்டிற்காண்டு ‘மா” விலையும் வித்தியா சப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே!

2 லட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்கள், ஆண்டுதோறும் மாம்பழக்கூழ் ஆலைகள் மற்றும் மா அறுவடை பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆண்டு தோறும் சுமார் ரூ.700 கோடிக்கு மேல் மாழ்பழக்கூழ் ஏற்றுமதி மற்றும் மாம்பழ விற்பனை மூலம் அந்நிய செலாவணி கிடைத்து வருகிறது.

இந்தாண்டு விளைச்சலை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யாமல் மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்கள் ‘சிண்டிகேட்” போட்டுக்கொண்டு கொள்முதல் செய்யாததாலும், ‘கல்டார் மருந்தின்” காரணமாகவும், மாம்பழங்கள் மரத்திலேயே கெட்டு அழுகி விழுகிறது என்பது அனைவரும் அறிந்

ததே. இதனால் ‘மா” விவசாயிகள் பாதிக்கப்பட்டது உண்மையே!

இந்நிலையில், கடந்த 12.06.2025 அன்று சேலத்திற்கு வருகை தந்த முதல்வர் அவர்கள் மற்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோரிடத்தில் ‘மா” விவசாயி என்கிற முறையிலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையிலும் நான் ‘மா” விவசாயிகளை காப்பாற்றிட மாம்பழக் கூழ் ஆலை உரிமையா ளர்களை உடனே ஆலைகளை திறந்து மாம்பழங்களை கொள்முதல் செய்யக் கோரியும்,

குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட கோரியும் மனு அளித்ததின் பேரில் முதல்வர் அவர்கள், வேளாண்துறை அமைச்சர் மூலம் மாவட்ட ஆட்சியரிடம் பேசி, உடனே ஆலைகளில் மாம்பழங்களை கொள்முதல் செய்திட அறிவுறுத்தி யதின் பேரில், தற்போது ‘மா”; கொள்முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ‘மா” விவசாயி களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வது குறித்தும் அரசு பரிசீலிக்க துவங்கி யுள்ளது. இதை தெரிந்துக்கொண்ட அ.தி.மு.க.வினர் தேர்தல் நெருங்குவதால் போராட்டம் என்கிற பெயரில், ‘தேர்தல் நாடகம்” நடத்த முயற்சிக்கிறார்கள். நீங்கள் என்ன நாடகம் போட்டாலும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்ததை விவசாயிகள் மறக்கவில்லை.

‘அரசு சார்பில் மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் (MANGO EXPORT ZONE)

கடந்த 20062011 தி.மு.க. ஆட்சியில் ‘மா” விவசாயிகள் எதிர்கால நலன் கருதி, சட்டமன்றத்தில் நான் பலமுறை கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், முத்த மிழறிஞர் கலைஞர், அன்றைய துணை முதல்வ ரும், இன்றைய முதல்வரு மான - தளபதியார் ஆகியோரின் அறிவுறுத்தல் பேரில், அன்றைய மாவட்ட ஆட்சியர் சந்தோஷ்பாபு முயற்சியால் மாம் பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைத்திட கிருஷ்ண கிரி ஒசூர் சாலையில் சிக்காரி மேடு அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டு ‘கிரிஸ்மா” என்கிற பிராண்டை உருவாக்கி கோப்புகள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் நிறுவன நிதி பங்களிப்புடன் நிதி உதவி கோரப்பட்டு பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது.

2011 ஆட்சி மாற்றத்திற்கு பின் திட்டத்தை கிடப்பில் போட்ட அ.தி.மு.க. ஆட்சி!

2011 ல் அதிமுக ஆட்சிக்கு வந்து 2021 வரை 10 ஆண்டுகள் ஆட்சி செய்தீர்களே! அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் உயர் கே.பி.முனுசாமி அமைச்சராக உயர்ந்த பதவியில் இருந்தீரே!

அப்போது எல்லாம் ‘மா” விவசாயிகள் ஞாபகம் வரவில்லையா? ‘மா” விவசாயிகளுக்கு எள்முனையாவது எதாவது செய்ததுண்டா? தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் தொடங்கி நடத்திட மனம் வரவில்லையா?

உங்களது 10 ஆண்டுகால ஆட்சியில் ‘மா” விவசாயிகள் பாதிக்கப்படவே இல்லையா? மா விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட ஏன் முயலவில்லை? உங்கள் ஆட்சியில் பாதிக்கப்பட்ட விவசாயி கள், மா மரங்களை வெட்ட வில்லையா?

பாளூர், அரசம்பட்டி பகுதிகளில் மழை, புயல் காற்றால் லட்சக்கணக்கான தென்னை மரங்கள் நாசமானதே! நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்தீர்களா? வறட்சியால் பல லட்சம் மா மரங்கள், தென்னை மரங்கள் காய்ந்து போனதே, விவசாயி களுக்கு நிவாரணம் ஏதாவது வழங்கினீர்களா?

தி.மு.க. அரசு எப்படி பொறுப்பேற்க முடியும்?

‘கல்டார் மருந்து” பயன்படுத்தியதால் ‘பூஞ்ச்” நோய் ஏற்பட்டு மாம்பழம் அழுகியதற்கும், தனியார் மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்கள் மாம்பழங்கள் கொள்முதல் செய்யாததற்கும் ‘தி.மு.க. அரசு எப்படி பொறுப்பேற்க முடியும்” அதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி ஆகியோர் 2025 மார்ச் 12 முதல் மே வரை தமிழ்நாடு சட்டமன்றம் நடந்ததே! மா விவசாயிகளை பற்றி ஏன் பேசவில்லை. ‘மா” விவசாயிகள் அப்போது உங்கள் கவனத்திற்கு வரவில்லையா?

விவசாய சங்கங்கள் கோரிக்கை மற்றும் எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் ‘மா” விவசாயிகள் உற்பத்தி செய்த மாம்பழங்களை கொள்முதல் செய்திட மாவட்ட ஆட்சியர் மூலம் உத்திரவிட்டு கொள்முதல் நடைபெற்று வருகிறது.

மாம்பழத்திற்கு குறைந்த பட்ச ஆதாரவிலை நிர்ணயம் செய்திட ஆலோசனைகள் நடைபெற்று வருவதை அறிந்துக் கொண்ட அதிமுகவினர் ‘அரசில் நாடகத்தை” அரங்கேற்றியுள்ளனர்.

உங்கள் அரசியல் நாடகம் எடுப்படாது? விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண்மைச் சட்டங்களை ஆதரித்த போதே! நீங்கள் விவசாயிகளின் எதிரிகள் என்பது தெரிந்துவிட்டது.

நான்காண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் சுமார் 2 லட்சம் விவசாயி களின் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கிதோடு, மழை, புயலால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நிவாரணம், வட்டியில்லா பயிர்க்கடன், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ‘தோட்டக்கலை கல்லூரியும்”, கம்பு ராகி விவசாயி களை ஊக்குவிக்க ரேஷன் கடைகளில் சிறுதானிய கொள்முதலையும் ஊக்குவித்து விவசாயி களுக்கு தனியாக நிதிநிலை அறிக்கை, கரும்பு, நெல்லுக்கு கூடுதல் விலை வழங்கியும், கடந்த நான்கு ஆண்டுகளாக ஜூன் 12ல் மேட்டூர் அணையை திறந்தும் விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்து வரும் முதல்வர் அவர்களின் பின்னால் தான் விவசாயிகள் நிற்பார்கள் என்பதை 2026 சட்டமன்ற தேர்தல் நிருபிக்கும். இது உண்மை.

இவ்வாறு தி.மு.க. மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.

சின்னதம்பி பெரியதம்பி

சின்னதம்பி : ஏண்ணே; “அடுத்த ஆண்டு தமிழ்நாட்டைக் கையில் எடுப்போம்” என்று மாநில பா.ஜ.க. தலைவர் கூறியிருக்கிறாரே?

பெரியதம்பி : **ஆமாம் தம்பி; தமிழ்நாட்டில், பா.ஜ.க.வின் நிலை தரைமட்டம் என்பது தரணிக்கே தெரியும். “கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை”.**

சூரியனைக் கையால் மறைத்துவிட முடியுமா?

“ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை” என்று கவிஞர் முத்துக் கூத்தன் எழுதிய பாடலை, “அரச கட்டளை” திரைப்படத்தில் நயினார் அந்நாளில் கேட்டிருப்பாரே!

எந்தப் பதவிக்கும் ஆசைப்படாதவர் –

கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவர் மிசா ராமநாதன்!

பொதுச் செயலாளர் – நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் இரங்கல்!

சென்னை, ஜூன் 20 -

“எந்தப் பதவிக்கும் ஆசைப்படாமல், கட்சித் தலைமைக்கு முழுக்கக் கட்டுப்பட்டவர் மறைந்த மிசா ராமநாதன்” என்று அவரது மறைவுக்கு கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:

எனது ஆருயிர் நண்பன் மிசா ராமநாதன் அவர்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியையும் கட்டுக்கடங்காத துயரத்தையும் தந்தது!

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் பி.ஏ. முடித்த பின்னர், சட்டக்கல்லூரியில் எங்களுடன் பி.எல். படித்தார்.

படித்த காலம் தொட்டே கட்சியின் முழு நேர ஊழியனைப் போல் கழகத்திற்காக அயராது பாடுபட்டவர்!

எந்தப் பதவிக்கும் ஆசைப்படாதவர்!

கட்சியின் தலைமைக்கு முழுக்கக் கட்டுப்பட்டவர்!

அவரது அருமை பெருமைகளை உணர்ந்த கழகத் தலைவர் அவர்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் அவருக்கு அறிஞர் அண்ணா விருது தந்து கவுரவித்தார்!

ராமநாதன் மறைவு கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்!

என் நெஞ்சிருக்கிறவரையில் அந்த நண்பனின் நினைவிருக்கும்!

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

‘மா’ தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது!

எதிர்க்கட்சிகளின் போராட்டம் தேவையற்றது!

வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை!

சென்னை,ஜூன் 20 -

‘மா’ தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்ட நிலையில் எதிர்காட்சிகளின் போராட்டம் தேவையற்றது என்று வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

விவசாயிகளின் நலனை காக்க திராவிட மாடல் அரசு 2021 மே மாதம் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும், வேளாண்மைத் துறை என்பதை வேளாண்மை - உழவர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்து, எண்ணிலடங்காத திட்டங்களின் மூலம் விவசாயிகளின் நலன் காக்கப்பட்டு வருகிறது. முந்தைய அ.தி.மு.க. அரசானது, ஒன்றிய அரசின் 3 வேளாண் சட்டங்களை ஆதரித்தது போன்ற பல்வேறு உழவர் விரோத நடவடிக்கையினால் அப்போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது விவசாயிகள் அனைவரும் எந்தவித போராட்டமுமின்றி மகிழ்ச்சியில் உள்ள நிலையினை பொறுக்கமுடியாத ஆதங்கத்தில் ”அன்றாட அறிக்கை திலகம்” எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டு மக்களை தினந்தோறும் குழப்பி வருகிறார்.

அன்றாடம் அறிக்கைப் போர் நடத்தும் எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய தினம் மா விவசாயிகளின் மீது அக்கறை உள்ளது போல் நடித்து அறிக்கை விட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் அதிக அளவு பயிரிடப்படும் பழப்பயிரான ”மா” கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி போன்ற மாவட்டங்களின் பெரும்பாலான விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. இவற்றில் பெங்களூரா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், நீலம், செந்தூரா, அல்போன்சா, ருமானி போன்ற இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

நடப்பாண்டில், பருவநிலை மா உற்பத்திக்கு பெரிதும் உகந்ததாக அமைந்ததால் சராசரி மகசூலான எக்டருக்கு 5 முதல் 6 மெட்ரிக் டன் என்பது எட்டு மெட்ரிக் டன்னுக்கும் மேலாக அதிகரித்து, சந்தையில் வரத்து அதிகரித்தது. இந்த நிலையில், மாம்பழக்கூழ் உற்பத்திக்கென்றே பெருமளவு பயன்படுத்தப்படும் பெங்களூரா இரக மாம்பழம் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கம் அடைந்த சூழல் நிலவிய தாக அறிய வந்த உடனேயே கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நியாயமான விலையில் கொள்முதல் செய்ய அறிவுறுத்தப் பட்டனர்.

இரண்டுகட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகும், கொள்முதல் செய்யப்படாத நிலையில், மாநில அளவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்

அரசு செயலாளர் தலைமையில், மா பதப்படுத்தும் நிறுவனங்களுடன் 16.06.2025 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மா உற்பத்தி செய்யும் விவசாயி களின் நலன் கருதி மா பதப்படுத்தும் நிறுவ னங்கள் மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடன் தொடங்கவும், மாம்பழக்கூழ் தயாரிக்க பெங்களூரா இரகத்தினை நியாயமான விலையில் உடனடியாக உழவர்களிடமிருந்து ”மா” பதப்படுத்தும் நிறுவ னங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு, மாம்பழக்கூழ் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆவன செய்வதாகத் தெரிவித்து மாம்பழக்கூழ் உற்பத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டு அனைத்து மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களும் பெங்களூரா இரக மாங்கனிகளை கொள்முதல் செய்து வருகின்றனர். விவசாயி களும் தங்களது மாங்கனிகளை இந்நிறுவனங்களிடம் மாம்பழக்கூழ் தயாரிக்க உரிய விலையில் அளித்து வருகின்றனர். மாங்கனிக்கான விலையும் படிப்படியாக கூடிய விரைவில் அதிகரிக்கும். மாங்கனிகள் கொள்முதல் ஆகஸ்டு மாதம் இரண்டாம் வாரம் வரை நடைபெறும். எனவே, ”மா” விவசாயி களுக்கு லாபம் கிடைத்திட இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

”மா” தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்ட நிலையில், இப்பிரச்சினையைப் பெரிதாக்கி அரசியல் செய்ய முயற்சித்த எதிர்க்கட்சிகள், அரசின் முயற்சியால் விவசாயிகள் ”மா” விற்பனை செய்வதைப் பொறுக்க முடியாமல் போராட்டம் நடத்துவதாகக் கிளம்பியுள்ளது தேவையற்ற ஒன்று. எனவே, தமிழ்நாட்டு மக்களின் கவனச்சி தறல்கள் ஏதுமில்லாமல் திராவிட மாடல் அரசுக்கு நாள்தோறும் விவசாயி களின் ஆதரவு பெருகி வருவது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வேலூர் மாவட்ட முன்னாள் அவைத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மா.பா.சாரதி அவர்களின் 49வது நினைவுநாளை முன்னிட்டு மாநகர தி.மு.க. அலுவலகத்தில் அவரின் திருவுருவப் படத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் மா.ப.அன்புநிதி, எஸ்.கதிரேசன், சி.சந்திரசேகரன் பகுதி கழக செயலாளர், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மீஞ்சூர் மு. கேசவன்
ஜூன் 20 (2019)

கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.